குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# தேவன் ஆபிரகாமுடைய அன்பை சோதித்தார்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus
Alastair Paterson

தழுவியவர்: M. Maillot; Tammy S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



ஓர் இரவிலே, தேவன்
ஆபிரகாமுக்கு
விசித்திரமான
கட்டளையை
கொடுத்தார். ஆபிரகாம்
தன்னைவிட
தன்னுடைய குமாரனான
ஈசாக்கை அதிகமாக

நேசிக்கிறானா
என்று
தேவன்
சோதித்து பார்த்தார்.

"உன்னுடைய குமாரனான ஈசாக்கை எனக்கு தகனபலியாக செலுத்து" என்று தேவன் கட்டளையிட்டார் ஈசாக்கை செலுத்தவேண்டுமா? என்னுடைய மகனை பலியாக கொடுக்கவேண்டுமா? அது ஆபிரகாமுக்கு கடினமான காரியம். அவனுடைய குமாரனை அவன் அதிகமாக நேசித்தான்.



தனக்கு புரியாத சூழ்நிலையாக
இருந்தாலும் தேவனை விசுவாசிப்பதற்கு
ஆபிரகாமும் பழகியிருந்தான்.
அதிகாலையிலே ஈசாக்கையும்,
இரண்டு வேலைக்காரர்களையும்
கூட்டிக்கொண்டு மலையிலே
பலிசெலுத்துவதற்கு
சென்றான்.



புறப்படுவதற்கு முன்,
தகனபலிக்கு தீயை
மூட்ட விறகு
கட்டைகளை
உடைத்து
கொண்டான்.
தேவனுக்கு கீழ்ப்படிய
ஆபிரகாம் திட்டம்
பண்ணினான்.



மூன்று நாட்கள் பிரயாணம்
பண்ணின பின் பலிசெலுத்த
வேண்டிய மலையின் அருகாமையிலே
வந்தார்கள். "இங்கே காத்திருங்கள்"
நாங்கள் போய் ஆராதனை
செய்துவிட்டு திரும்பி
வருவோம் ...



... "என்று ஆபிரகாம் வேலைக்காரரிடத்தில் சொன்னான்". ஈசாக்கு விறகு கட்டைகளை எடுத்துக்கொண்டான். ஆபிரகாம் கத்தியையும், தீயையும் எடுத்துக்கொண்டான்.



"தகனபலிக்கு ஆடு எங்கே"
என்று ஈசாக்கு கேட்டான்.
"தேவன் தாமே நமக்கு
கொடுப்பார்" என்று
ஆபிரகாம் பதிலளித்தான்.





தேவன் தெரிந்துகொண்ட சரியான இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். தேவனுக்கு பலி செலுத்துவதற்காக விறகுகளை அடுக்கி ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை அங்கே உருவாக்கினான்.

ஆபிரகாம் அனேக
பலிபீடங்களை
கட்டியிருந்தான். ஆனால்
இந்த பலிபீடத்தை
கட்டுவதற்கு மிகவும்
கஷ்டமாக
இருந்திருக்கலாம்.



ஆபிரகாம் ஈசாக்கை கட்டி, தன்னுடைய அருமையான குமாரனை பலிபீடத்தில் வைத்தான். ஆபிரகாம் உண்மையிலே தேவனுக்கு கீழ்ப்படிந்து தன்னுடைய ஒரே அன்பு மகன் ஈசாக்கை பலியிடப்போகிறானா?





ஆம்!
ஆபிரகாம்
கத்தியை
உயர்த்தியபோது
வெட்டப்போகிற
பாகமானது
மின்னித்துவங்கியது.
ஒருவேளை
ஆபிரகாமினுடைய இருதயம்
சோர்வடைந்திருக்கலாம்,
ஆனால் தேவனுக்கு
கீழ்ப்படியவேண்டும் என்று
அவனுக்குத் தெரியும்.



"நிறுத்து!" என்று தேவதூதன் உரத்த சத்தமிட்டான்.



"எனக்கு
இப்போது
தெரியும்.
நீ தேவனுக்குப்
பயப்படுகிறவன்.
உன்னுடைய ஒரே
குமாரனை,
உன்னுடைய ஏக
சுதனை எனக்கு
கொடுப்பாய்"
என்று
தேவதூதன்
சொன்னான்.

முட்புதர்களுக்குள்ளே ஒரு ஆடு சிக்கிக்கொண்டிருப்பதை ஆபிரகாம் கண்டு, தன்னுடைய குமாரனை அவிழ்த்துவிட்டு, அந்த ஆட்டை தகனபலியாக செலுத்தினான்.



"என் தகப்பன் சொன்னபடியே, தேவன் கொடுத்தார்" என்று ஈசாக்கு யோசித்திருக்கலாம்.



தகப்பனும், மகனும் தேவனை தொழுதுகொண்டபோது, தேவதூதன் ஆபிரகாமிடத்தில் பேசினார். "நீ எனக்கு கீழ்ப்படிந்தபடியினாலே, உன் சந்ததியின் மூலமாக அனைத்து தேசங்களையும் ஆசீர்வதிப்பேன்", என்றார். ஒரு நாள் ஆபிரகாமுடைய சந்ததியின் மூலமாக இயேசு பிறப்பார்.



ஆபிரகாமும், ஈசாக்கும் வீடு திரும்பினார்கள், சில நாட்களுக்குப் பின்பாக, ஒரு துயரம் ஏற்பட்டது. சாராள் மரித்துப்போனாள். ஆபிரகாம் தன்னுடைய மனைவியை இழந்தான், ஈசாக்கு தன்னுடைய தாயை இழந்துபோனான்.



அடக்க
ஆராதனை
முடிந்த பின், ஆபிரகாம்
தன்னுடைய முதன்மையான
வேலைக்காரனை, ஈசாக்குக்கு
ஒரு மனைவியை தேட அனுப்பிவைத்தான்.



ஆபிரகாமினுடைய
உறவின்
முறையாரிலே ஒரு
பெண்ணை மனைவியாக
கொள்ள அவர்களுடைய சொந்த
தேசத்திற்குச் சென்றான்.



வேலைக்காரன் தேவனிடத்தில் ஓர் அடையாளத்தை கேட்டான், "எந்த ஒரு பெண்மணி என்னுடைய ஒட்டகங்களுக்கு தண்ணீர் கொடுப்பாளோ அவளே ஈசாக்குக்கு சரியான மனைவி" என்று நினைத்தான்.



உடனே ரெபெக்காள் தண்ணீர் கொடுக்க முன்வந்தாள். அவள் ஆபிரகாமினுடைய உறவினராக இருந்தாள். தேவன் தன்னுடைய வேண்டுதலை கேட்டார் என்று வேலைக்காரன் அறிந்துகொண்டான்.



ரெபெக்காள் தன்னுடைய குடும்பத்தை விட்டுவிட்டு ஈசாக்கை திருமணம் செய்துகொள்ள புறப்பட்டாள். ஈசாக்கை அவள் ஆறுதல் படுத்தினாள். ஈசாக்கு அவளை அதிகமாக நேசித்தான்!



# தேவன் ஆபிரகாமுடைய அன்பை சோதித்தார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஆதியாகமம் 22 - 24

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

5

60

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16